பொது மக்கள் பணம் போகும் வழ

Regd: No. M. 5458 Phone: No 4502

விலை அரை அணு இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை எம். ஏ.,

மாலை 2 | சென்னை 5—12—50 | மணி 4

ஐரோப்பிய பாதுகாப்புப் பற்றி பெருங் கவலை

(o)

ஜெர்மனிக்கு மூன்று படைகளை இங்கிலாந்து அனுப்பும்

லண்டன், டிச. 4—

பிரசிடெண்ட் ட்ரூமனுக்கும் பிரிட்டிஷ் பிரதமர் ஆட்லிக்கு மிடையே சம்பாஷணை நாளை ஆரம்பமாகிறது அநேகமாக சம்பாஷணைகள் இரண்டொரு நாள் நீடிக்கக்கூடும்.

இவர்கள் சம்பாஷணை பின் கண்ட மூன்று முக்ய விஷயங்களைக் குறித்ததாகவே இருக்கும் என்று ஸண்டே டைம்ஸ் ராஜதந்திர நிருபர் கூறுகிருர்.

1. கொரியா நிலைமையை அரசியல் இராணுவம் இரு துறைகளிலும்-கட்டுப்படுத்துவது.

2. லேக்ஸக்ஸவில் இப்போது வந்துள்ள பீகிங் தூதுகோஷ்டியுடன் சமாதானப் பேச்சு நடத்துவது.

3. ஐரோப்பாவின் பாதுகாப்பு. ஐரோப்பாவில் பிரிட்டன் தன் துருப்புகள் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்றும், ஐரோப்பாவுக்காக யுனைடெட் ஸ்டேட்ஸ் அனுப்பக்கூடிய துருப்புகளை கீழ்க்கோடியில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ட்ரூமனிடம் தெரிவிக்கப்படலாம் என்று இந்நிருபர் கூறுகிருர்.

யுத்தகாலத்திய பிரிட்டிஷ் இரண்டாவது ராணுவமோ அல்லது எட்டாவது ராணுவமோ ஜெர்மனியில் மீண்டும் ஏற்படுத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.

அணுக்குண்டு விஷயம் மிக முக்கியமானவை என்ருலும் ஆட்லி வாஷிங்டன் சென்றது அதை முக்கியமாக குறித்து அல்லவென்றும் அணுக்குண்டு விஷயமான பிரஸ்தாபம் வருவதற்கு முன்னமேயே இந்த விஜயத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதென்றும் அந்நிருபர் கூறுகிருர்.

பிரிட்டன் ஜெர்மனிக்கு மூன்று டிவிஷன்களை அனுப்பலாம் என்று தெரிகிறது. ஒரு டிவிஷன் இப்போது தயாராக இருக்கிறது. மற்ருெரு டிவிஷன் இப்போது அமைக்கப்பட்டு வருகிறது. மூன்ருவது டிவிஷன் சீக்[illegible]மே ஏற்படலாம்.

வடநாட்டு சுரண்டல் தடுப்பு மகாநாடு

2-12-50 சனிக்கிழமை திருச்சியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் வடநாட்டு சுரண்டல் தடுப்பு மாநாடு மிக சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டுக்கு எல்லா ஊர்களிலிருந்தும் பெருவாரியான மக்கள் வந்து கலந்துகொண்டனர்.

மாநாடு சரியாக குறிப்பிட்ட காலத்தில் தொடங்கப்பட்டது. மாநாட்டுத் தலைவர் தோழர் ஜி. டி. நாயுடு வராததால் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமை வகித்து நீண்டநேரம் பல முக்கிய விஷயங்களைப் பற்றி பேசினுர். பின்னர் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி வகுப்புரிமை மாநாடு

3—12—50 ஞாயிற்றுக்கிழமை வகுப்புரிமை மாநாடு அதற்காக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் கூடியது.

மாநாட்டு தலைவர்களை தனி வண்டியில் அமர்த்தி ஊர்வலமாக மாநாட்டு பந்தலுக்கு அழைத்துச் சென்றனர்.

மாநாட்டை முன்னுள் அமைச்சர் தோழர் எஸ். முத்தைய முதலியார் அவர்கள் திறந்துவைத்து நாட்டின் நிலைமையும், திராவிட மக்களின் அவசியமான கோரிக்கைகளைப் பற்றியும் பேசி கடைசியாக திராவிட கழகம் அரசியலில் பங்கு கொள்ள வேண்டுமென்பதுடன்

(2-ம் பக்கம் பார்க்க)

நல்ல திட்டங்களை நிறைவேற்றப் பணமில்லை

(o)

ஆனல் நாற்பது லட்சம் ரூபாய் நாசம் செய்யப்பட்டது

(:0:)

அகதிகள் பேரால் நடக்கும் அநீதிகள்

அகதிகள் என்ற பேரைக் கூறிக்கொண்டு, நாட்டைக் குட்டி[illegible] சுவாராகக்கச் சிலர் சுற்றித்திரிகின்றனர். இவர்களைக் கருவியா[illegible] கொண்டு சில அரசாங்க அதிகாரிகள் தங்கள் பணப் பெட்டியை நிர[illegible]பிக் கொள்ளவும் தயங்கவில்லை.

இவ்வாறு நாட்டு மக்களின் பணத்தைக் கையாண்டு மோசடி செய்யும் வேலை தேச பக்தர்கள் ஆட்சியில் தேச பக்தர்களிடையேதான் நடக்கின்றது.

தேச பக்தர்கள் ஆட்சியில் இத்தகைய ஊழல்கள் புதிது புதிதாக தோற்ற மெடுக்கின்றன. பொது மக்கள், தேசம், சுதந்தரம் என்[illegible] வார்த்தைகள் மூலம் சிலர் தங்கள் சுயநலத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள நல்ல வசதி கிடைத்திருக்கிறது—கேட்பாரற்ற நிலைமையில் நாடு இருப்பதால்.

அகதிகளை அவ்வந்நாடு ஏற்றுக்கொண்டு, குடியேற்றி, தம் குடிகளாகக் கருதி உதவிசெய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கம் மற்றைய மாகாண அரசாங்கங்களைவற்புறுத்தியது. இதன் பலனுகச் சென்னை மாகாணமும், தன் நாட்டு ஏழைமக்களைச் சரியானபடி கவனித்து, இருக்க இடமற்றுத் தவிக்கும் ஏழைகளுக்கு இடம் பார்த்தளிக்கவும்முடியாத நிலையிலிருந்தும், மத்திய அரசாங்கம் அனுப்பி வைத்த அகதிகளுக்கு ராஜோபசாரம் செய்துக்கொண்டிருக்கிறது மத்திய அரசாங்கத்துக்குக் கண்ணை மூடிக்கொண்டுஅடிப்பணியவேண்டியிருப்பதால்.

இதேபோன்று ராஜஸ்தான் அரசாங்கம் உலவும் அகதிகளை ஏற்றுக்கொண்டு, பாரத்பூர், ஆள்வார் போன்ற இடங்களில் குடியேற்றி வைக்க முன்வந்தது. இந்த அகதிகள் மேற்குப் பாக்கிஸ்தானிலிருந்து வந்தவர்கள் என்று கூறப்பட்டது. இவர்களைக் குடியேற்றி வைப்பதில் உதவி செய்வதற்காகவேண்டி மத்திய அரசாங்கம் சில அதிகாரிகளையும் ராஜஸ்தானுக்கு அனுப்பி வைத்தது.

இந்த அகதிகளுக்கு ராஜஸ்தான் அரசாங்கம் நிலங்களைப் பிரித்துக் கொடுத்து, பயிர்த் தொழிலில் ஈடுபடுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. விவசாயக் குடும்பமாகப் பார்த்து, ஒவ்வொரு குடும்பத்துக்கும் 10 முதல் 15 ஏக்கர் நிலம் வரை கொடுப்பதென்றும், உழவு செய்ய மூளையும் இக்குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் எருது, ஏர், கலப்பை முதலியவைகளுக்குகாக ஆயிரம் ரூபாய் கடன் கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அதிகாரிகளுட் சிலர் அகதிகள் குடியேற்ற விஷயத்தில் மிகுந்த அக்கரை யிருப்பதாகக் காட்டிக் கொண்டு, உழவரல்லர்தவர்கள், அகதிகளேயல்லாதவர்கள் முதலியவர்களிடமிருந்தெல்லாம் லஞ்சம் வாங்கிக்கொண்டு, நிலங்களை ஒதுக்கிக் கொடுத்தும், பணம் கடன் கொடுத்துமிருப்பதாகத் தெரிகிற[illegible]

ராஜன்தானில் நிலைத்து வா[illegible] விரும்பாதவர்களிடம்கூட, ல[illegible] வாங்கிக்கொண்டு நிலமளிக்க, அவ[illegible]கள் அந்நிலங்களை வந்த வரைக்[illegible] இலாபம் பெறும் முறையில் வி[illegible] விட்டு எங்கோ இன்னொரு மாக[illegible]ணத்துக்கு அகதிகளாகப் போய் சேர்ந்துவிட்டனர்.

இவ்வாறு 4000 பேர் அகதிக[illegible] என்று கூறி நிலம் பெற்று விற்[illegible] விட்டும், பணம் வாங்கிக்கொண்டு ஓட்டம் பிடித்துவிட்டனர். [illegible] வகையில் 40 லட்சம் ரூபாய் வ[illegible] யில் அரசாங்கம் நஷ்டமடை[illegible]

வேண்டி வந்துவிட்டது. ஓடியவர்கள் எங்கிருக்கின்றனர் என்று அரசாங்கத்தால் ஒருவரைக் கூடக் கண்டு பிடிக்க முடியவில்லையாதலால், இத்தொகையைப் பேசாமல் நஷ்டக் கணக்கில் எழுத வேண்டியதாகிவிட்டது.

இவ்வாறு மோசக்காரர்களைப் போஷிக்கவும், இவர்களுக்கு உடந்தையாக அரசாங்க உத்தியோகஸ்தர்களே இருக்கவும், இவ்வாறுன நிலையில் பொதுமக்களின் பணம்

4-ம் பக்கம் பார்க்க

திராவிட நாடு

ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் தனித் தனி சுதந்திர நாடுகளாகஇருக்கும். அதற்குத் தனித் தனியான சட்ட சபைகள் உண்டு. ‘டெல்லி’ இருக்காது இங்கு! இவை நான்கும் சேர்ந்து திராவிட கூட்டாட்சியாக இருக்க வேண்டுமென்பது நம் ஆசை. இதுதான் நாம் கேட்கும் திராவிட நாட்டின் படபிடிப்பு!

—சி. என். அண்ணுதுரை

மாலைமணி

சென்னை 5—12—50 செவ்வாய்க்கிழமை

பாசிஸத்தை நோக்கி...

புதிய அரசியல் திட்டத்தின் 19-வது விதிப்படி, மக்களுக்குப் பேச்சுரிமை உண்டு. ஆயுதங்கள் இன்றி அமைதியாகக் கூட்டம் கூட்டலாம்; கழகம், மன்றம் முதலியவற்றைக் கூட்டலாம்; இந்தியா முழுவதும் தடையின்றிச் சுற்றிவரலாம்; இந்தியாவின் எப்பகுதியிலும் குடியேறி வாழலாம். சொத்து வாங்கவும் விற்கவும் செய்யலாம்; எந்த வேலையோ, வாணிகமோ, தொழிலோ செய்யலாம்.

இந்த உரிமைகள் மக்களுக்கிருப்பது மத்திய, மாகாண அரசுகளுக்குப் பெருஞ்சங்கடமாயிருக்கிறது முன், போல் மக்கள் உரிமையில் தலையிட முடியவில்லை; துணிந்து தலையிட முடியவில்லை. துணிந்து தலையிட்டாலும் நீதிமன்றங்கள் மக்கள் உரிமையை வாங்கிக் கொடுத்து விடுகின்றன. முன்போல் மக்களை மிரட்டி அடக்கி, எதிர்க்கட்சி—எதிர்க் கருத்து எதுவும் வெளிப்படாதபடி அழுத்தி விட முடியாதபடி இச் சட்ட விதி காங்கிரஸ்காரர்கள் கையைப் பிணைத்துவிட்டது, உயர்நீதி மன்றங்கள் தலையீட்டினால் மக்கள் அரசாங்கத்தின் உரிமைகளைப் பெற்றுக்கொண்டதால், அரசாங்கம் தொல்லைக்குள்ளாக வேண்டியிருக்கிறதென்று சென்னை, பம்பாய், உத்தர பிரதேசம், பீஹார், மேற்கு வங்காளம் முதலியவை மத்திய அரசாங்கத்திடம் முறையிட்டுக் கொண்டிருக்கின்றன என்று அறியக் கிடக்கிறது.

எனவே, அந்த விதியை மாற்றியமைத்து, காங்கிரசுக்கு எதிராக மக்கள் வளர்ச்சியடைவதைத் தடை செய்து, பத்திரிகைகளின் உரிமைகளைக் கட்டுப்படுத்தி விடுவதன் மூலம், அவை அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்காதபடி செய்து, தங்கள் நிர்வாகம் எதிர்ப்பின்றி எளிதில் நடைபெற்றுச் செல்லவழி வகுக்குமாறு சில மாகாணங்கள் மத்திய அரசாங்கத்தைத் தூண்டி முயற்சி செய்திருப்பதாகவும்; மத்திய அரசாங்கம் அதற்காக மத்திய பார்லிமெண்ட் சபையில் அந்த விதியைத் திருத்த முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகவும் அறியக் கிடக்கிறது.

அரசியல் திட்ட அமைப்பு அவையின் தலைவராயிருந்த டாக்டர் அம்பேத்கார், இந்த 19-வது விதியை மாற்றியமைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருப்பதாகவும். மாகாண அரசாங்கங்கள் விரும்புமாறு ஆனால் பார்ப்பதற்கு மக்களுரிமைத் போர்வையிருக்குமாறு திருத்துமாறு காக்க வேண்டிக் கொள்ளப்பட்டிருப்பதாக ஒரு வதந்தி உலவுகிறது.

அரசியல் திட்ட அமைப்பில், "புதிய அரசியல் திட்ட அமைப்புப்படி பொதுத் தேர்தல் நடந்து பார்லிமெண்ட் சபைகள் இரண்டும் அமைக்கப்படும் வரையில் இப்போதைய இடைக் காலச் சபை அரசியல் திட்டம் அளிக்கும் உரிமைகளை அனைத்தையும் அதிகாரம் அனைத்தையும் ஏற்று நடத்திவரலாமென்று 379-வது விதி உரிமை அளிக்கிறது, அரசியல் திட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று விரும்பினாலும் செய்துகொள்ள அனுமதியளிக்கிறது இந்த விதி.

எனவே, மத்திய அரசாங்கத் தலைவர்கள், இந்த விதியைக் கைக்கொண்டு, மக்களுரிமை விதியாகிய 19-வது விதியைத் திருத்தி தங்கள் விருப்பதற்கேற்ப அமைத்துக்கொள்ள முன் வந்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

உண்மையில். இப்போதுள்ள பார்லிமெண்ட் சபையங்கத்தினர்களுட்டவர் "சிறை சென்ற தியாக" சர்ட்டிபிகேட் பெற்றவர்களே ஒழிய நாட்டாட்சியைத் திறமையுடன் கூடியவர்கள் என்று கூறிவிட முடியாது ஒன்றிரண்டு தலைவர்கள் கூறுவதற்கு உடனே கைகளைத் தூக்கி ஆதரவு காட்டக் கூடியவர்களாகவே பலர் இருக்கின்றனரே யொழிய நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து. நாட்டு மக்களின் நிலைக்கேற்ப வேலை செய்யக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாயில்லை, எனவே, இந்தக் கூட்டத்தார் நிறைந்துள்ள பார்லிமெண்ட்டில் மத்திய, மாகாண அரசாங்கங்களின் எண்ணம் எளிதில் கைகூடிவிடும் என்பதில் ஐயம் இல்லை.

ஆனால் உண்மையில் அரசியல் திட்டத்தைத் திருத்த இந்தப் பார்லிமெண்ட்டுக்கு உரிமை சற்றும் இல்லை காங்கிரஸார் இவ்வாறு செய்ய முயல்வது தங்கள் அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தி மக்கள் உரிமையில் தலையிடுவதேயாகும்,

வேலும், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பொதுத் தேர்தல் நடத்த அஞ்சிக் காலங்கடத்திக் கொண்டிருப்பதையும், ஆங்காங்கே உள்ள முற் போக்குச் சக்திகளை அடக்கி ஒடுக்க முயன்று கொண்டிருப்பதையும் பார்த்தால் உண்மையில் காங்கிரஸ்காரர்கள், எந்தந்திரம் செய்தாவது, எந்தச் சூழ்ச்சி செய்தாவது, இந்த நாட்டு ஆட்சி தங்கள் கையை விட்டுப் போகாதவண்ணம் செய்துகொள்ள முயல்கின்றார்களென்பதையும், எதிர்ப்பையெல்லாம் அடக்கிச் சர்வாதிகார ஆட்சி நடத்த விரும்புகிறார்கள் என்பதையும், நாட்டைப் பாசிஸப் பாதையில் நடத்திச் செல்ல விரும்புகிறார்கள் என்பதையும் மக்கள் நன்கறிந்துகொள்ள முடிகிறது.

காங்கிரஸ்காரர்களின் இந்தப் போக்கு, மக்களின் உரிமைகளைக் கொண்டுழித்து, சர்வாதிகார ஆட்சியை நடத்தச் சதி செய்யும் போக்கு உண்மை யென்ருல், நாட்டு மக்களின் மிக வன்மையான கண்டத்துக்கு இந்தக் காங்கிரஸ் பாசிஸ வெறி ஆள்வ நேரிடும் என்பதை எடுத்துக் காட்டுகிறோம்.

காங்கிரஸ்காரர்களின் போக்கு எத்தகையது என்பதை அவர்களுடைய நடவடிக்கைகள் நன்ருக எடுத்துக்காட்டி வருவதால் பொது மக்கள் இத்தகையவர்கள் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், தேசத்தின் பெயரால். சுதந்தரத்தின் பெயரால், மக்களை என்றைக்கும் அடிமைப் படுத்தி ஏமாற்றிவைப்பதென்பது எவ்வகையாலும் விரும்பத்தகாத வேலையாகும் காங்கிரஸ்காரர்கள் எத்திசையில் போய்க்கொண்டிருக்கின்றனர் என்பதைப் பொது மக்கள் கூர்ந்து கவனித்தே வருகின்றனர், ஏமாற்று வித்தை எத்தனை நாளைக்கு தான் பலிக்கும்!

பூங்காநகர் மாணவர் முன்னேற்ற இல்லம்

முதல் ஆண்டு விழா

26—11—50 மாலை 6-மணிக்கு ஒற்றவாடை தியேட்டர் அருகிலுள்ள அம்மன்கோயில் தெருவில் நடைபெற்றது.

நாரண துரைக்கண்ணன், அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், கருத்து வேற்றுமைகள் பல இருப்பினும் பொது மேடைகளில் அதைப் பாராட்டாமல் பொது நோக்குடன் அரசியல் தலைவர்கள் பேச முன்வர வேண்டுமென்றும், மேல்படி இல்லத்தார் இத்தகைய கருத்துக்கொண்டு மிக நெருக்கடியான நிலைமையில் உழைத்து இம்மாதிரியான கூட்டத்தை நடத்தியமை பற்றி தான்பெருமகிழ்வு கொள்ளுவதாகக் குறிப்பிட்டார்.

அறிஞர் க. அப்பாத்துரை அவர்கள் பேசுகையில், கடமையை . உணர்ந்து தமிழ் நாட்டிலுள்ள மாணவர்கள்அரசியல் கட்சிகளில் பங்கு கொள்ளாமல், தமிழுக்காகவும், சமுதாயத்திற்காகவும் பாடுபட வேண்டுமென்று வலியுறுத்திஞர்.

பேட்டை கௌன்சிலர் தோழர் நமசிவாயபாரதி அவர்கள் பொருளாதாரத்தில் கீழ் நிலையில் இருப்பவர்களின் தொண்டை தற்போதய அரசியலார் உதாசீனம் செய்வது வருந்தத்தக்கது என்று கூறி, இதர கட்சி நாடகங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தா கலந்து கொள்வதை அரசியலார் தடுப்பதை வன்மையாகக் கண்டித்து அண்ணுதுரையை வரவேற்பதாகக் கூறி முடித்தார்.

செயலாளர் பி. ஏ. முகுந்தம் இல்லத்தின் ஆண்டுவிழா குறிப்பைப் படித்து முடித்த உடன் அறிஞர் அறிஞர் அண்ணுதுரை அவர்கள்பேசியதாவது.

முன்னேற்றத்தை விரும்பாத எந்த மனிதனும் உலகத்தில் இன்றைய நிலையை எய்தியிருக்க முடியாதுஆனல் நமது துர்ப்பாக்கியம், இந்நாட்டில் முன்னேற்றம் என்பது மற்ற நாடுகளை போல் அல்லாமல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றுவிட்டதினுல், உலகம் மாயை என்றும், இகத்தை மறந்து பரத்தை நாடி பின்னேற்றத்திற்கு செல்லும் மக்களை பகுத்தறிவு ஊட்டி முன்னேற்றத்திற்கு அழைத்து செல்லுவதுதான் எங்களின் பணி என்றும், நாட்டின் மாணவர்கள் மன வளம் பெருகக்கூடிய புத்தகங்களைப் படிக்க வேண்டும், நாட்டைப்புத்துலகப்பூங்காவாக ஆக்க வேண்டும் என்றும், முன்னேற்றத்திற்காக உழைக்கும் இல்லத்தின் மாணவர்களைப் பாராட்டி முடித்தார்.

மு. பரமானந்தம் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

வட நாட்டு சுரண்டல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் மாநாட்டுத் தலைவர் தோழர் எம். ரத்தினசாமி அவர்கள் நீண்ட கை தட்டுதலுக்கிடையே எழுந்து தனது தலைமை உரையை நிகழ்த்தினுர். அவர் பேசிய பேச்சில் மிக முக்கியமானவை.

தேசத்தில் அமைதியும் மக்களிடையே திருப்தியை உண்டாக்க வேண்டுமானுல், வகுப்புரிமையை காப்பாற்றவேண்டியது மக்கள் கடமை மட்டுமல்ல அரசாங்கத்தின் பொருப்புமாகும். உலகில் மிக முற்போக்கு அடைந்துள்ள அமெரிக்கா கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளும் தனது சட்டசபைகளிலும் பொதுசர்வீஸ்களிலும் எல்லா வகுப்பாருக்கும் பிரதிநிதித்வம் அளித்துள்ளதென்றும் - திராவிட நாட்டு மக்கள் கோரும் வகுப்புரிமை மிக மிக நியாமானதென்றும் - இவ்விஷயமாக சென்னை அரசாங்கம் இம்மாணத்திலுள்ள பெருவாரியான மக்களின் கோரிக்கையைப் புறக்கணிக்கக்கூடாதென்றும் கூறி இவ்விஷயமாக மத்திய அரசாங்கத்தினிடம் ஒரு தூது கூட்டத்தை அனுப்பிவைக்க இம்மாநாடு ஏற்பாடு செய்யவேண்டுமென கேட்டுக்கொண்டார்.

பின்னர் சில முக்கிய தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நீண்ட நேரம் பேசிய பிறகு - நன்றிகூற மாநாடு முடிவு பெற்றது.

நாட்டு நிலையை மாற்றமுடியும்!

தமிழ்நாடு தனித்தே இருந்தது!

இன்பத்தை எண்ணிடும்போது உள்ளப் வேதனைப்படும்

இழந்த இன்பம் இனியும் பெறமுடியும்

(சி. என். அண்ணாதுரை)

பத்தாண்டுகளுக்கு முன்பு என்னைப் பார்த்திருந்தால்தானே தெரியும்! அந்த பளபளப்பும், வனப்பும், வசீகரமும், இப்போது மங்கிவிட்டது. இன்று நடையிலே தளர்வு! தாடையிலே சுருக்கம்! இடையிலே பிடிப்பு! உடையிலே அலட்சியம்! சடையிலே நரை! என்றாகிவிட்டது, என முன்னால் பருவ மங்கையாக இருந்து இன்று மாதாகி, வயது முதிர்ந்த அம்மை கூற, இன்று இளமங்கையாக, இன்ப வாடையை எங்கும் பரப்பும் இயந்திரமாக, பிடியிடையும், குழல் மொழியும், பெடைநடையும் கொண்டவள், நாளை நமக்கும் இக்கதிதானே, என்று ஏங்க அது கண்டு நகைத்துக்கொண்டே உலகு நகர்ந்துகொண்டே போகிறது.

நேற்று—இன்று—நாளை! ஆம், இந்த மும்மொழி. முப்பருவத்தை மூன்று நிலையை, மூன்று முக்கிய சகாப்தத்தைக் காட்டுகின்றன.

நேற்று அலர்ந்திருந்த ரோஜா, இன்று கூந்தலை விட்டுக் கீழே இறங்கி குப்பைமேடு போகிறது. இன்று "மொக்காக" இருப்பது, நாளை மலரும்; மணம் வீசும், மணத்துக்கு உல்லாசத்தைத் தரும்! இது பருவ மாற்றத்தினால் நிலையுங் குணமும் மாறும் இயற்கையைக்குறிப்பதாகும்.

நாட்டு நிலையை மாற்ற முடியும்

இன்று இயற்கையின் போக்கை செயற்கை முறைகொண்டு செப்பனிட்டு, வரஇருக்கும் மாற்றத்தைத் தடுக்க மக்கள் முற்படுகின்றனர். பத்தாறு ஆண்டு சென்ற பழந் தோழர் மாளவியா தமது வாலிபப் பருவத்தை மீண்டும் பெறப் பரமசாதுவின் அருள் தேடினாரன்றோ!

நேற்று முற்றிய கதிருடன் இந்த நிலம் இன்று அறுவடை காரணமாக வெறும் வெளியாகி விடுகிறது. ஆனால் நாளை மறுநாள், சின்னாள் பலநாள் சென்றேனும்நில மங்கை பச்சைப் பட்டாடை அணிந்துகொண்டு பார்ப்பவரை உற்சாகப்படுத்துகிறாள். காரணம் மனிதனின் உழைப்பு!

மக்கள் பருவத்தை மருந்துவகைகளாலும், பண்டங்களின் இயல்பை மக்கள் தம் உழைப்பாலும், மாற்றுவது சரிவர, குறைவர நடப்பினும் நடக்காது போயினும், மக்கள் தம் அறிவினால், தம் நாட்டு நிலைமையை மட்டும் நிச்சயம் மாற்ற முடியும். நேற்று இருந்தது, இன்று இருப்பது இந்நிலை என்பதை ஆராய்ந்தறிந்து குறை களைந்து குணங்கொண்டு நாட்டு நடப்பை அமைப்பின், நாளை நாட்டு நிலையை நல்லதாக்கமுடியும்.

நேற்றுக் குளிர், இன்று காய்ச்சல். உடனே மருந்து உட்கொள்ளாதுவிட்டால்—மருந்து உட்கொள்ளாததுடன் குளிர் இல்லை. காய்ச்சல் இல்லை, எல்லாம் மனப்பிராந்தி என யாரோ கூறக்கேட்டு,- குளிர்நீர் அருந்திக் கூத்தாடித் திரிந்தால் ஜன்னி கண்டு இறப்பதும் இயல்பன்றோ! அஃதே போலத்தான் இன்று பலர் காங்கிரசில் உள்ளனர்.

நேற்று நாட்டில் அசோகரின் சாம்ராஜ்யமும் பிந்துசாரரின் பிரபல ஆட்சியும், கனிஷ்கரின் கவர்ச்சி தரும் கோலாட்சியும், அக்பர் ஆட்சியும், சிவாஜியின் சிறப்பும், சேரசோழ பாண்டியர் செங்கோலும் இருந்தன. ஆனால் இந்த 'நேற்றைய நாட்களில்' ஒரு வகுப்பு முடியரசர், கொடையரசர், இசையரசர் யாருக்கும் மேலோராய் இருந்தனர். அழகிய தன்மையினர் எனக் கூறிக்கொண்டனர். ஆண்டவனின் அருள் பெற்றோர் எனச் செப்பினர்; மற்றையோரை அடக்கினர், மறையோர் எனக் கூறினர். பிறர் பொருள் எம்மது என்று புகன்றனர். பிராமணர், பூசுரர் என்றனர். இது "நேற்று" இருந்தது என்பதை எந்தச் சரித்திராசிரியரும் மறைக்க முடியாது. எந்த அரசியல் வாதியும், அந்த கால முதற்கொண்டு பார்ப்பன ஆதிக்கம் பல்வேறு துறைகளிலும் இருந்துவந்ததையோ, அதன் காரணமாக நாட்டுப் பழம் பெருங்குடி மக்கள் அடிமைகளானதையோ, இந்த அடிமைத்தனத்தைச் சகித்துக் கொண்டு இருந்ததால்தான், நாட்டு மக்களிடை சயமரியாதை யற்றுப் போயிற்று என்பதையோ,சயமரியாதையை இழந்ததாலேயே சுயாட்சி செத்தது என்பதையோ, ஆதாரங் காட்டி, இல்லை எனக்கூறமுடியாது கூறத் துணிபவர் உண்டேல்வாரும் மன்ற மேறுவோம், என அறைகூவி அழைக்கிறோம்.

நேற்று நாம் நாடாண்டவர்களை எல்லாம். காட்டைக் காட்டி ஏய்த்தோம், இன்று நம்மை இன்னவர் எனக் கண்டு கொள்ளும்படி வெள்ளையன் செய்துவிட்டான். எனவே அவனை விரட்டிவிட்டால் நாளைநாம் மீண்டும் பூ[illegible]ராக வாழலாம் என்பதுதான் காங்கிரசைக் கையாயுதமாகவும், காந்தியாரைக்கையாளாகவும் கொண்டுள்ள பார்ப்பனீயத்தின் நினைப்பு.

நேற்று நாம் பார்ப்பனீயத்தினிடம் சிக்கி, பலப்பலதொல்லைகள் பெற்றோம், இன்றுதான் சற்று விழிப்படைந்துள்ளோம், நாளை நம் நாட்டை நாமே ஆளவும் நம்மை பார்ப்பனீயம் மீண்டும் பற்றாதிருக்கவும் இன்றே பாதுகாப்புத் தேடிக் கொள்வோம் என்று நாம் கூறுகிறோம்.

நேற்று இருந்ததுபோலவே பல ஜாதிப் பிரிவினை நாளை சுயராஜ்யமடைந்த இந்தியாவிலும் இருக்கட்டும் என அவர்கள் கூறுகின்றனர். அதற்கேற்றபடியே காரியங்கள் செய்கின்றனர். ஒரு தோட்டத்தில் பல புஷ்பங்கள் இருப்பது அழகல்லவா என அதற்கு ஆச்சாரியார் குட்டிக்கதை கூறுகிறார்.

நாம் நேற்று இருந்த ஜாதிபேதக் கொடுமை நாளை இருத்தல் ஆகாது. இன்றே அதைப் போக்கும் முறைகள் தேவை எனக் கூறுகிறோம்.

இந்த விஷயத்தில் நமது கொள்கையை ஆதரிப்பவரின் தொகை நாளுக்குநாள் பெருகிவருகிறது.

கண்டவர் வியக்கும் விதமாகக் கட்டமைந்த உடல் படைத்தவன் காலத்தின் கோளாறினால், தன் பலமிழந்து தளர்ந்துபோனால் முன்னாளில் தனக்கிருந்த பலத்தை எண்ணி ஏங்கிப் பெருமூச்சுவிடுதல் இயற்கை.

கைநிறையப் பொருளும், பொருள் பெரும் வகையும் பெற்று வாழ்ந்துவந்தவன், திடீரெனத் தன் பொருளைப் பிறர் பறித்துக்கொண்டு போக வறுமையில் சிக்கிவாடும் போது முன்னாளில்தான் இருந்த நிலையை எண்ணி வருந்தாது இரான்.

கருத்துக்கிசைந்த கட்டழகனைப் பெற முடியாது போய், சமுதாயக் கட்டுப்பாட்டின் காரணமாக யாருக்கோ வாழ்க்கைப் பட்ட, வனிதை சாலையிலும் சோலையிலும் சாயங்கால வேளையிலும், தன் காதலனைக் கண்டு களித்த காலத்தை நினைத்தும், எடுத்தற்கெல்லாம் இடியும் அடியும், உதையும், தரும் முரடனுக்கு பெண்டானோமே என எண்ணியும் ஏங்குவது உண்டல்லவா!

இந்த இன்பத்தை எண்ணிடும்போது, உள்ளம் வேதனைப்படும் இன்பத்தை இழந்ததுடன் துன்பத்திலும் சிக்கிவிட்டால்அந்தவேதனை பன்மடங்கு அதிகமாவதுடன், இழந்த இன்பத்தை மீண்டும் எப்படியேனும் பெறவேண்டுமென்ற எண்ணம் வலுத்துப் பெருத்து, வீறிட்டு எழும்.

இதுவே இன்றைய தமிழர் நிலை. தமிழ்நாடென்றுமே தலை வணங்கி வாழ்ந்ததில்லையே! தனிநாடாகதிருநாடாகவன்றோ தழைத்து வந்தது. ஆரியமன்றோ அதனை அடுத்துக் கெடுத்தது.

அசோகர், அக்பர், ஆகிய மன்னாதி மன்னர்கள் காலத்திலும், மண்டியிட்டதில்லை தமிழ்நாடு. அசோகரின் கல்வெட்டு, கலிங்கத்தை, கடும்போரில் அவர்வென்றதைக் காட்டுகிறது. அசோகரின் படைபலம் கலிங்கத்துப் போரில் காடு, இரத்தக்காடாகப் போரிட்ட வீரம் ஆகியவற்றைக் காட்டுகிறது. ஆனால், மற்றமென்ன இதில்விளக்கமாகிறது? இவ்வளவு கடுமையாகப் போராட்டு வெற்றி பெறக்கூடிய அசோகர் திராவிடநாட்டைவெல்ல முடியவில்லை. என்ற உண்மையை எடுத்துக் காட்டுகிறது.

தமிழ் நாடு தனித்தே இருந்தது

சேர, சோழ, பாண்டியர்கள்மண்டலாதிபதிகளாக வாழ்ந்தனர் அக்காலத்திலும் அசோகர் காலத்தில் இவர்கள் அரசுரிமை இழக்காது தமிழ் நாட்டைத் தனிநாடாக ஆண்டு வந்தனர் எனில், இது தமிழரின் தனிச்சிறப்பைக் காட்டவில்லையோ எனக் கேட்கிறோம்.

ஐம்பத்து ஆறு மன்னர்கள், ஐம்பத்தாறு தனித்தனிநாடுகளை ஆண்டு வந்த வரலாற்றைக் கூறும் சமஸ்கிருத நூல்கள் காலமுதற்கொண்டு, தமிழ்நாடு தனித்துத்தான் வாழ்ந்து வந்தது.

கிறிஸ்து பிறப்பதற்கு 6-நூற்றாண்டுகளுக்கு முன்னர் "தமிழர் என்ற ஆரியரல்லாதார் தனி நாகரீகம், தனிமொழி, தனி வரலாறுடன் தனி நேஷனாக வாழ்ந்து வந்தனர்" என்று ஆசிரியர் பார்கீத்தர் கூறியுள்ளார்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு, "திராவிட நாட்டு மன்னர்கள் தங்கக் கொப்பரையில் சந்தனத் தைலத்தை ஊற்றி வைத்துக் கொண்டு வாழ்ந்தனர்" என்று கூறப்படுகிறது.

மூன்றாவது நூற்றாண்டில் திராவிட நாட்டின் அமைப்புபற்றிய வரலாற்றை அக்காலத்திலிருந்த வரலாற்று நூல்களில் வரைந்திருக்கின்றனர்.

திருநெல்வேலிக்குத் தென கிழக்கே 15-வது மைலில் உள்ள, ஆதிச்சநல்லூரில் ஆராய்ச்சியாளர்கள், கல் வெட்டுகளையும், திராவிடச் சின்னங்களையும் கண்டு பிடித்து எடுத்தனர். இதே விதமான திராவிடச் சிறப்புச் சின்னங்கள், பஞ்சாபில், மாண்ட்காமரி ஜில்லாவிலுள்ள ஹரப்பா (Harappa) என்ற இடத்திலும் சிந்து மாகாணத்திலும், லார்க்கானா ஜில்லாவிலுள்ள, மகன்ஜதாரோவிலும் கண்டு எடுக்கப்பட்டன.

திராவிட நாகரிகத்தின் சிறப்பு

எனவே ஒரு காலத்தில் திராவிட நாகரிகம், திராவிட ஆட்சி, நெல்லையில் தொடங்கி நெடுக நெடுகச் சென்று, சிந்து, பஞ்சாப் வரையிலும் அதற்கு அப்புறமும் சென்றது என்று விளங்குகிறது.

பதஞ்சலி எழுதிய புத்தகம், அசோகர் கல் வெட்டுகள், மெகஸ்தனிஸ் எழுதிய புத்தகங்கள், சிலோன் நாட்டுச் சரித சம்பந்தமான புத்தகங்களான மகாவம்சம்,

இனி நடப்பவை

மதுராந்தகம்:—10-12-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு கடைவீதி காந்தி மண்டபத்தில் தோழர் செய்யூர் சுதர்சனம் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. என். அண்ணாதுரை, தில்லை-வில்லாளன், திண்டிவனம் அ. தங்கவேலு, சதுரை அழகரசு ஆகியோர் பேசுவர்.

* * *

சேலம்:—இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக பொதுக் கூட்டம் 10-12-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு செவ்வாய்ப்பேட்டை வாசகசாலைத் தெருவிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

* * *

இராதாநல்லூர்: இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக துவக்கவிழா கூட்டம் 7-12-50 இலக்குமணன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் பி. எஸ். இளங்கோ, நாகராசன், ஆர். தமிழரசன் ஆகியோர் பேசுவர்.

* * *

பள்ளிப்பட்டி:—இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழக பொதுக் கூட்டம் 8-12-50 மாலை 6 மணிக்கு செல்வம் திடலில் திராவிட முன்னேற்றக் கழக துவக்க விழா ஆர். நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் ஆர். தமிழரசன், பி. எஸ். இளங்கோ, ரெ. பாலு ஆகியோர் பேசுவர்.

கோவை மாவட்டம்

தோழர்கள் ஈ.வே. கி. சம்பத், எஸ். ஆர். சந்தானம் கோபி. ஜி. என். ராஜு ஆகியோர்கள் நாளது டிசம்பர் 20-உ முதல் கோவைமாவட்டத்தில், சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

கடிதம் எழுத விரும்புவோர் என். இ. பாலகுரு, அமைப்பாளர் திராவிட முன்னேற்றக் கழகம், ஈரோடு என்ற முகவரிக்கு எழுதவும்.

பொது மக்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறி பொறியாய்ப் போகவும், இந்திய அரசாங்கம் விட்டுக்கொண்டிருப்பது மிகவும் கண்டனத்துக்குரிய விஷயமாகும்.

இத்தகைய யோக்கியதையுடைய அகதிகளை, நம் நாட்டு மக்களின் நலத்தையும்கவனிக்காமல்போஷிக்க வேண்டிய பொறுப் பேற்றுக் கொண்டிருக்கும் சென்னை அரசாங்கத்தின் நிலை என்னவாயிருக்கிறதென்பதைச் சென்னை அரசாங்கம் கவனித்திருக்கிறதா என்பது அறியக் கூடவில்லை.

அகதிகள் பேரால் நாட்டு மக்களைச் சூறையாடும் இந்தத் தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுதல் நலமாயிருக்கும். இதற்கெல்லாம் திராவிடம்இடங்கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் காங்கிரஸ் அமைச்சர்கள் அடிபணிந்து நடக்க வேண்டியதேற்பட்டால் இதைவிடக் கேவலமான அடிமைத்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது.

நாட்டு நிலைமை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீபவம்சம் ஆகிய எத்தனையோ சான்றுகள், திராவிடச் சிறப்பை விளக்குகின்றன.

அதனால் தான் சர், ஜான் ஈவான்ஸ் என்பார் "மனித சமுதாயத்திற்கே நாகரிகத் தொட்டிலாகத் திராவிட நாடு இருந்தது"— அதாவது திராவிட நாட்டில்தான் நாகரிகம் முதன் முதலாகத் தோன்றிற்று என்று கூறியுள்ளார்.

திராவிட நாட்டின் இந்தப்பண்புகள் ஏன் மறைக்கப்பட்டது? ஆரிய சூழ்ச்சியால்தான்!

ஆனால் சரித்திரத்தைத் துருவிப் பார்த்தால் ஆரியத்தின் அலங்கோலமும் திராவிடத்தின் தனி சிறப்பும் திராவிடத்தை அடக்க அழிக்க, ஆரியர் செய்த சூழ்ச்சியும் விளங்காமற் போகாது.

மஹா அலெக்சாண்டர் இந்தியா மீது படை எடுத்தார் எனச் சரித்திரம் கூறுகிறது. ஆனால் திராவிடம் தலை நிமிர்ந்து வாழ்ந்து வந்தது அந்தக் காலத்திலும்.

அதற்குப் பிறகு ஏற்பட்ட எந்த சாம்ராஜ்யத்திலும் திராவிடநாடு சேர்ந்திருக்கவில்லை. தனித்தே இருந்தது. எந்த வல்லரசும் திராவிட நாட்டைவென்றதாகச் சரிதம் கூறவில்லை.

இந்தியாவிலேயே இணையற்றமன்னர்கள் என்ற அட்டவணை போடுவதானால், அதில் அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர், சந்திரகுப்தமௌரியர், சமுத்திர குப்தர், அக்பர் என்ற பெயர்கள் பொறிக்கப்படும். இவர்கள், சாம்ராஜ்யங்களை ஏற்படுத்தி, கீர்த்தியுடன் வாழ்ந்தவர்கள். ஆனால் இத்தனை மன்னாதி மன்னர்கள் இருந்தபோதும், திராவிடநாட்டை அவர்கள் ஆளவில்லை. திராவிடநாடு திராவிடருக்கே தான் இருந்தது.

இடிந்த கோட்டைகள், விந்திய மலைக்கு மேலேயே தவிரக் கீழே அல்ல! தோற்ற மன்னர்கள், நர்மதை நதிக்கரைக்கு அப்புறமே தவிர இப்புறமல்ல.

"திராவிடநாடு",

குன்றத்தூர் வழக்குகள்

144-தடை உத்திரவை குன்றத்தூரில் 26-10-50-ல் மீறியதாகவும் கலகம், கல்வீச்சு முதலிய குற்றங்கள் புரிந்ததாகவும் 19 பேர்கள் மீது குற்றஞ்சாட்டி சைதாப்பேட்டை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஆட்சியாளர் வழக்கு தொடர்ந்திருப்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இவ்வழக்கு8-12-50ல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படுமென்று தெரிகிறது.

என். வி. நடராஜன்

26-10-50-ல் குன்றத்தூரில் 144 தடையுத்தரவை மீறியதாக "திராவிடன்" ஆசிரியர் என். வி. நடராஜன், தோழர் பாலசுந்தரம் ஆகிய இருவர்கள் மீது கொண்டுவரப்பட்ட வழக்கு 9-12-50-ல் சைதாப்பேட்டை சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நடைபெறும் என்று தெரிகிறது.

திருவாரூரில்

தி. மு. கழக ஆண்டு விழா

10-12-50 ஞாயிறு மாலை 5-மணிக்கு தெற்கு வீதி அழகிரிசாமி மேடையில் நடைபெறும்

C. P. சிற்றரசு A. V. P. ஆசைத்தம்பி
N. S. இளங்கோ அரங்கண்ணல்
கண்ணதாசன் M. கருணாநிதி

கலந்துகொள்வர்

(என். எஸ். கே. குழு) கே. ஆர். செல்லமுத்து (இயக்கப் பாடல்கள் பாடுவார்கள்.

திராவிட மக்கள் திரளாக வருக

வானொலி

(6—12—50—புதன்)

சென்னை
மீட்டர் 211·3

காலை

7-0 ஸ்வாகதம்
7-15 தமிழில் செய்தி
7-30 ஆர். கிருஷ்ணவேணி பாட்டு
8-0 ஆங்கிலத்தில் செய்தி
8-15 ஒலிபரப்பு முடிவு

பிற்பகல்

1-0 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்தி
1-50 சினிமா பாட்டுகள்
2-0 தமிழில் செய்தி
4-30 ஐரோப்பிய சங்கீதம்

மாலை

5-30 இந்திராபாய் காதில்கர் பாட்டு
6-20 பி. எல். சுப்புலக்ஷ்மி பாட்டு
7-0 திரைகானம்
7-15 தமிழில் செய்தி
7-45 சமூக பிரச்னை
8-0 ஜி. சீதா பாட்டு
9-0 ஆங்கிலத்தில் செய்தி
9-30 மதராஸ் 2-ல் உள்ளபடி
10-30 ஒலிபரப்பு முடிவு

திருச்சி
மீட்டர் 395·8

காலை

7-10 கீதாரம்பம்
7-15 தமிழில் செய்தி
7-30 டி. பாலாம்பாள் வீணை
8-0 ஆங்கிலத்தில் செய்தி
8-15 காலை இசை
8-30 ஒலிபரப்பு முடிவு

பிற்பகல்

1-0 கதம்பம் (இசைதட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்தி
1-50 குன்னக்குடி வெங்கடராமய்யர் பாட்டு
2-0 தமிழில் செய்தி

மாலை

5-40 இசைப்பயிற்சி
7-15 தமிழில் செய்தி
7-30 தனயன் நாடகம்
8-0 சிதம்பரம் ஜி. அம்புஜக்கரசு பாட்டு
8-30 மதுரை டி.எம் சௌந்தரராஜன் பாட்டு
9-0 ஆங்கிலத்தில் செய்தி
9-15 டி. பாலாம்பாள் வீணை
10-0 ஒலிபரப்பு முடிவு

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

6—12—50

தேவபாண்டலம்
தோழர் ஈ. வே. கி. சம்பத்.

சென்னை கோகலேமண்டபம்
தோழர்கள் என். வி. நடராசன், மு. கருணாநிதி;

8—12—50

அய்யம்பேட்டை (காஞ்சிபுரம்)
தோழர்கள் சி. என். அண்ணாதுரை, அரங்கண்ணல், தில்லைவில்லாளன்.

10—12—50

தூத்துக்குடி
தோழர் ஈ. வே. கே. சம்பத்.

திருவாரூர்
தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன், அரங்கண்ணல், என். எஸ். இளங்கோ, ப. உ. சண்முகம், கே. ஆர். செல்லமுத்து.

மதுராந்தகம்
தோழர்கள் சி. என். அண்ணாதுரை, தில்லை வில்லாளன், திண்டிவனம் தங்கவேலு. சதுரை அழகரசு.

தேவை

"மாலை மணி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை விவரங்களுக்கு எழுதவும்.

மதுரை
திருச்சி
கும்பகோணம்
மாயவரம்
வேலூர்
திருவண்ணாமலை

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி சென்னை—1.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I